## <u>ஒட்டன்சத்திரம் நகராட்சி</u>

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 68 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.30.06.2018–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள். 12.12.2018 (புதன் கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 11.12.2018

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் : 1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4491/2015/பி3 நாள்.24.08.2018–ல் நகராட்சி பகுதிகளில் அனைத்து வார்டுகளிலும் உயர்தரமான குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து, அதற்கான அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்கள் வாயிலாக அக்கார்டு விளம்பர நிறுவனம், சென்னை மூலம் மாநில அளவிலான அரசு ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மற்றும் தினசரி நாளிதழ்களில் மாநில அளவில் 29.11.2018–ம் நாளில் தமிழ் மற்றம் ஆங்கிலம் நாளிதழ்களில் வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.67,358/– மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை சென்னை அக்கார்டு விளம்பர நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணிகளுக்கான மாநில அளவிலான அறிவிப்பு செய்தமைக்கான பட்டியல் தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும், மேற்படி செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 266**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 2018–19–ம் ஆண்டுக்கான புதிய சொத்துவரி, குடிநீர் வரி, பிறப்பு இறப்பு விண்ணப்பக் கட்டணங்கள் மற்றும் உரிமையாணைக் கட்டணங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டியுள்ளது, அதன்படி கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பட்டுள்ளவாறு மாற்றி அமைக்க புதிய விண்ணப்ப கட்டணங்கள் வசூல் செய்ய தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | புதிய சொத்துவரி விண்ணப்பக் கட்டணம் | 100 |
| 2 | புதிய சொத்துவரி பெயர் மாற்ற விண்ணப்பக் கட்டணம் | 100 |
| 3 | புதிய குடிநீர் இணைப்பு விண்ணப்பக் கட்டணம் | 100 |
| 4 | குடிநீர் வரி பெயர் மாற்ற விண்ணப்பக் கட்டணம் | 100 |
| 5 | லாரி மூலம் குடிநீர் விநியோக கட்டணம் (ஒரு லோடு தண்ணீர்) | 1500 |
| 6 | பிறப்பு மற்றும் இறப்பு சான்று விண்ணப்பக் கட்டணம் | 10 |
| 7 | கடைகளுக்கான உரிமையாணை விண்ணப்பக் கட்டணம் | 50 |

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக நலன் கருதி பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு, விண்ணப்பக் கட்டணங்களை 01.01.2019 முதல் வசூல் செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 267**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 3**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுகாதாரப் பிரிவு வாகனம் TN57 AW5529 டம்பர் பிளேசர் வாகனத்தில் கிளட்ச் பிளேட் பழுதுகள் சரிசெய்வதற்கு, பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனம் ஸ்ரீ அருள்முருகன் ஆட்டோ ஸ்பேர் பார்ட்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் மூலம் பழுதுகள் முழுவதும் சரி செய்யப்பட்டு வாகனம் பணி மனையிலிருந்து நல்ல முறையில் வரப்பெற்று இயக்கத்தில் உள்ளது. மேலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி வாகனம் பழுதுகள் செலவினம் ரூ.12,250/– ஐ துப்புரவு ஆய்வாளர் திரு.வீரபாகு அவர்களால் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு தொகை வழங்கிட தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1007/2018/எச்1)

**தீர்மான எண். 268**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 4</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுகாதாரப் பிரிவு வாகனம் TN57 AW 2197 டிப்பர் லாரிக்கு கிளட்ச் பிளேட் பழுதுகள் சரிசெய்வதற்கு, பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனத்தின் மூலம் பழுதுகள் முழுவதும் சரி செய்வதற்கும் அதற்கான செலவினம் பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1310/2018/எச்1)

**தீர்மான எண். 269**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 5</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுப் பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் பொதுசுகாதார பிரிவு வாகனங்கள் Insurance Company மூலம் வாகனம் காப்பீடு முடிவுறும் தருவாயில் உள்ள வாகனங்களை முன்னதாக புதுப்பிக்க வேண்டியுள்ளதால், நகராட்சி நிர்வாக நலன் கருதி அனைத்து பிரிவு வாகனங்கள் காப்பீடு புதுப்பிக்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி வாகனங்கள் காப்பீடு முடிவுறும் தருவாயில் இருப்பதால், பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1257/2018/எச்1)

**தீர்மான எண். 270**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 6</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி வார்டு எண்.3–ல் கதவு எண்.267டி6, திண்டுக்கல் பழனி சாலையில் திரு.நாட்ராயன் (எ) துரை, புதிய குடிநீர் குழாய் இணைப்பு வேண்டி விண்ணப்பித்து, புதிய குழாய் இணைப்பிற்கான டெபாசிட் மற்றும் விகிதாச்சார கட்டணம் ரசீது எண்.1450478 நாள்.14.08.2014–ல் ரூ.6000/– மற்றும் ரசீது எண்.1450496 நாள்.14.08.2014–ல் ரூ.2000/– மொத்தம் ரூ.8000/– செலுத்தி ரசீது பெற்றுள்ளார். அன்னார் தனக்கு புதிய குழாய் இணைப்பு வேண்டாம் என தெரிவித்து மனு அளித்துள்ளார். தற்சமயம் டெபாசிட் தொகை மட்டும் திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. அன்னார் செலுத்தியுள்ள புதிய குடிநீர் குழாய் இணைப்பிற்கான டெபாசிட் தொகையை மட்டும் வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 271**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 7</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 12 வது வார்டு கஸ்தூரி நகர், நாயக்கனூர் செல்லும் சாலையில் வடக்குப் பக்கம் கால்வாய் இல்லாததால், மழைநீர் மற்றும் கழிவுநீர் தேங்கி அப்பகுதியில் பொது சுகாதார கேட்டினை ஏற்படுத்திவிடுகிறது. மேலும் TURIP 2017–18 திட்டத்தின் கீழ் அப்பகுதியில் தார் சாலை அமைக்கப்பட உள்ளதால், சாலை சேதமாகும் வாய்ப்பு உள்ளது. எனவே பொது மக்களின் பொது சுகாதார நலன் கருதி, மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்திட ரூ.3.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது ஆணையாளரின் பார்வைக்கும், ஒப்புதலுக்காவும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 272**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 8</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 18 வார்டு பகுதிகளில் கீழ்க்கண்ட இடங்களில் அமைந்துள்ள பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய்களில் ஏற்பட்டுள்ள பழுது நீக்கம் மற்றும் பிரதான உடைப்புகள் சரி செய்யத வகையில்

| வ.எண் | இடங்கள் |
|---|---|
| 1 | குறிஞ்சி நகர் 18 வது வார்டு உப்புத்தண்ணீர் பைப்லைன் 6 இடங்கள் |
| 2 | 4 வது வார்டு சொசைட்டி காலனி குழாய் பழுது நீக்கம் |
| 3 | 3 வது வார்டு உப்புத்தண்ணீர் வேலை 2 லைன் |
| 4 | 11 வது வார்டு உப்புத்தண்ணீர் வேலை ஜி.ஐ பைப்லைன் |
| 5 | நாகணம்பட்டி 1 வது வார்டு உப்புத் தண்ணீர் 2 இடங்கள் |
| 6 | விநியாகா பைப்புகள் முன்பு 9 வது வார்டு 5 பைப் மெயின் லைன் வேலை |
| 7 | 12 வது வார்டு தும்மிச்சம்பட்டி புதூர் உப்பு தண்ணீர் குழாய் பழுது |
| 8 | பகிர்மான குழாய்களின் மெயின் கேட் வால்வுகள் பராமரிப்பு |
| 9 | பேருந்துநிலையம் கழிப்பிடம் பைப்லைன் வேலை |
| 10 | 8 வது வார்டு மெயின் லைன் 3 லைன் மற்றும் 6 லைன் |
| 11 | பி.என்.கே. மண்டபம் எதிரில் 18 வது வார்டு பொன்னகரம் கேட் வால்வு |
| 12 | நகராட்சி அலுவலகம் முன்பு காவேரி பைப் லைன் வேலை |

மேற்கண்ட இடங்களில் பகிர்மான குழாய்களில் ஏற்பட்ட உடைப்பு மற்றும் லீக் வேலைகள் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் விதி 15–ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டு அதற்கான செலவினம் தொகை ரூ.152220/–மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 273**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 9</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2018 கஜா புயலால் பாதிக்கப்பட்ட கீழ்க்கண்ட இடங்களில் உடைந்த மின்கம்பங்கள் மற்றும் மின் மோட்டார்களின் வயர் மற்றும் சர்வீஸ் ஜி.ஐ பைப்கள் உடைந்தததை உதிரி பாகங்கள் கொண்டு மாற்றி அமைக்கப்பட்டது. அதன்படி,

| வ.எண் | இடங்கள் |
|---|---|
| 1 | முத்துராஜ் வீட்டிற்கு முன்பாக உள்ள EB போஸ்ட் |
| 2 | சாமுவேல் வீட்டிற்கு முன்பாக BDO |
| 3 | மெயின் தொட்டி மின் மோட்டார் |
| 4 | ராணி வீட்டிற்கு முன்பாக |
| 5 | பார்க் மோட்டார் அறை |
| 6 | திடீர் நகர் விநாயகர் கோவில் முன்பாக |
| 7 | வினோபா நகர் எருமை கரடு – காந்தி நகர் |
| 8 | பழனி சாலை ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் முன்பாக |
| 9 | சொசைட்டி காலனி பிரிண்ஸ்பல் வீடு அருகில் |

மேற்கண்ட இடங்களில் பழுது பணிகள் மேற்கொள்ளப்பட்டு நல்ல நிலையில் இயக்கப்பட்டு இயக்கத்தில் உள்ளது. இப்பணிகளின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் விதி 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டது. ஆதற்கான செலவினம் ரூ.137295/– மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 274**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 10</u>**

அரசாணை 181–ன்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) துறை நாள்.19.09.2018 –ன்படி ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கீழ்காணும் பட்டிடயலில் உள்ள இனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமை 2016–2017 முதல் 2018–2019 முடிய மூன்றாண்டுகளுக்கு குத்தகை விடப்பட்டு, மேற்படி குத்தகை உரிமை வரும் 31.03.2019ம் நாளுடன் மூன்றாண்டுகள் முடிவுறும் நிலையில் உள்ளதால், மேற்காணும் இனங்களுக்கு உரிமை மூன்றாண்டுகளுக்கு (2019–2020 முதல் 2021–2022 முடிய) பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | இனம் | முடிவுறும் காலம் |
|---|---|---|
| 1 | நகராட்சிக்கு சொந்தமான (சி கிரேடு) பேருந்து நிலையத்தினுள் வரும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 31.03.2019 |
| 2 | பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண முறை கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 31.03.2019 |
| 3 | அலுவலக வளாகத்தில் உள்ள தென்னை மற்றும் இலவ மரங்களின் மேல் மகசூல் உரிமை | 31.03.2019 |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. அரசாணையின்படி மூன்றாண்டுகள் குத்தகை காலம் முடிவுறுவதால் பட்டியலில் காணும் இனங்களுக்கு உரிய வழிமுறைகளின்படி பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான செலவினங்களைநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்..

**தீர்மான எண். 275**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 11**

ஒட்டன்சத்திரம் நகராட்சி வழியாக பழனி பாலதண்டாயுதபாணி திருக்கோவிலில் தைப்பூச திருவிழா 2019–ம் ஆண்டு 21.01.2019–ம் நாள் நடைபெறவுள்ளதை தொடர்ந்து, ஒட்டன்சத்திரம் நகராட்சி வழியாக பாதையாத்திரை பக்தர்கள் அதிகளவில் செல்வதால், பாதையாத்திரை செல்லும் பக்தர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், வேணல் பந்தல், தற்காலிக கழிவறை, பிளாஸ்டிக் விழிப்புணர்வு தட்டிகள் மற்றும் முதலுதவி முகாமிற்கு தேவையான மருந்துப் பொருட்கள் விநியோகம் செய்தல் முதலான பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான உத்ததேச செலவினம் ரூ3.00 லட்சம் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண். 276**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 12**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் வீடு வீடாக சென்று திடக்கழிவு சேகரம் செய்யும் பணிக்கு பயன்படுத்தப்படும் 10 தள்ளு வண்டிகள் பழுதடைந்த நிலையில் உள்ளதால், சேகரமாகும் குப்பைகளை அகற்றுவதற்கு விரைவாக பணிகள் மேற்கொள்வதற்கும், தள்ளு வண்டிகளின் பழுதுகள் சரிசெய்து வழங்குவதற்கு 07.12.2018–ம் தேதியன்று நடைபெற்ற குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது

| வ.எண் | நிறுவனம் பெயர் மற்றும் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.கண்ணன்,<br>ஜெயலட்சுமி இன்ஜினியரிங் லேத்,<br>வெல்டிங் ஆட்டோ ஒர்க்ஸ்,<br>தாராபுரம் சாலை, ஒட்டன்சத்திரம் | 35000/– |
| 2 | திரு.ஆர். முருகன்,<br>முருகன் ரீவைண்டிங் வயரிங் பிளமிங்<br>மற்றும் ஆட்டோ மொபைல்ஸ் ஒர்க்ஸ்,<br>பைபாஸ் சாலை, ஒட்டன்சத்திரம் | 40000/– |

மேற்கண்ட விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி மதிப்பீட்டுத் தொகை வரிசை எண்.1–ல் கோரிய திரு.ஆர்.கண்ணன், ஜெயலட்சுமி இன்ஜினியரிங் லேத் வெல்டிங் ஆட்டோ ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி ஏற்றுக்கொள்ளவும், பணி உத்தரவு வழங்க தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, அதற்காகும் செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண். 277**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –13**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 12 வது வார்டு கஸ்தூரி நகர், நாயக்கனூர் செல்லும் சாலையில் வடக்குப் பக்கம் மழைநீர் வடிகால் அமைத்திட ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தனிஅலுவலர் அவர்கள் நாள்.23.11.2018–ல் முன்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்காக 12.12.2018–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.அய்யாவு | 0.05 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஆர்.ரங்கசாமி | 3.00% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஆர்.அய்யாவு என்பவருக்கு 0.05% மதிப்பீட்டு விலையில் வரப்பெற்ற குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.அய்யாவு என்பவருக்கு ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 278**

அனுமதிக்கப்பட்டது.

இடம். ஒட்டன்சத்திரம்.
நாள். 11.12.2018

தனிஅலுவலர்
மற்றும் ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி.

## ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 68 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.30.06.2018–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள். 31.12.2018 (திங்கள் கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 30.12.2018

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**<u>பொருள் : 1</u>**

இந்நகராட்சி நகரமைப்பு பிரிவில் **1920–ம்** வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **249,250,312,** மற்றும் **328** பிரிவுகளின் கீழ் கட்டிட அனுமதி, இயந்திர நிறுவன அனுமதி, போன்றவைகளுக்கு கட்டணங்களை வசூல் செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. கட்டண பட்டியல் திருத்தம் செய்யப்பட்டு **5** 1/2 வருடங்களுக்கு மேல் ஆகி உள்ளதாகவும் சந்தை மதிப்பு **2013** ம் ஆண்டிலிருந்து **2018** வரை அதிகரித்துள்ள நிலை உள்ளதால் தற்பொழுது மேற்படி கட்டணங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளபடி திருத்தி அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 – ன் கீழ் ஒட்டன்சத்திரம் நகராட்சியால் கட்டிட உரிமம், அனுமதி போன்ற இனங்களுக்குரிய திருத்தியமைக்கப்பட்ட கட்டண விகிதங்களின் பட்டியல்**

| வ. எண். | நகராட்சிகளின் சட்டம் பிரிவு | உரிமையாணைத் தொகை விதிக்கப்பட வேண்டிய விவரம் | கட்டண விகிதம் ரூ. | அளவு | உரிமையாணை செல்லுபடியாகும் காலம் | குறிப்பு (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | 175 to 179 | நிர்வாக அதிகாரியால் உத்திரவிட்டப்படி புதிய தனியார் தெரு அமைக்க | 450/– | 10 ச.மீ அல்லது அதன் பாகத்திற்கு | ஒரு முறை மட்டும் | - |
| 2 | 181, 196 | தரைதளத்தில் தெருப்பக்கம் திறக்கும் படியான கதவு, கேட், ஆகியவைகளுக்கு அனுமதி வழங்க | 600/– | ஒரு இனத்திற்கு | ஒரு வருடத்திற்கு | நிர்வாக அதிகாரி அனுமதிக்கும் பட்சத்தில் ( ஒவ்வொரு வருடமும் அனுமதியை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்) |
| 3 | 183 (1), (4) | 1, கட்டிடங்களுக்கு வழியாக அமையும் படிக்கட்டுகள் சாக்கடை மூடு கற்கள் | 250/– | மூடுகற்களுக்கு ஒரு ச.மீக்கு இலவசம் அதற்கு மேற்படும் ஒவ்வொரு சதுர மீட்டருக்கு (அ) அதன் பாகத்திற்கும் | ஒரு வருடத்திற்கு (ஒவ்வொரு வருடமும் அனுமதியை புதுப்பித்துக்கொள்ள வேண்டும், | ஒரு சதுர மீக்கு மேல் பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் ஆட்சேபனை ( இல்லா இனங்கள் மீது நிர்வாக அதிகாரி அனுமதிக்கும் பட்சத்தில்) |
| | | வரை குடிசைகள் புதியதாக கட்டவோ கூடுதலாக கட்டவோ தற்காலிக கொட்டம் போடவோ | 300/– | | 15 தினங்களுக்கு | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 183 (2) – (4) | கோடைப்பந்தல்கள் குறிப்பு அதன் கீழ் எந்தவிதமான பொருட்களும் சேகரித்து வைப்பதோ, விற்பனை செய்வதோ கூடாது | 350/– | 10 ச.மீ அல்லது அதன் பாகத்திற்கு | மார்ச் முதல் மே மாதம் முடிய | பொது மக்களுக்கும் போக்குவரத் திற்கும் இடையூறு இல்லை என நிர்வாக அதிகாரி கருதினால் மட்டுமம் அனுமதி வழங்கப்படும் |
| 5 | 183 (2) | திருமணம் மற்றும் இதர விசேஷங்களுக்கான தற்காலிகப் பந்தல்கள் | 350/– | 10 ச.மீட்டருக்கு அல்லது அதன் பாகத்திற்கு ரூ.20/– கூடுதல் ஒவ்வொரு சதுர மீட்டருக்கும் / அதன் பாகத்திற்கும் | ஒரு வாரத்திற்கு | - |
| | | மத சம்பந்தமான காரியங்களுக்கு | இலவசம் | | 15 தினங்கள் வரை | - |
| 6 | 186 (1) | தெருக்களின் ஓரத்தில் பந்தல் போட அல்லது தூண் நட, துவாரம் போட | 200 | ஒரு குழிக்கு ஒரு தடவைக்கு | - | - |
| | | i) மண் சாலையின் | | | மூன்று நாட்களுக்கு மட்டும் | |
| | | ii) கருங்கல் ஜல்லி சாலையில் | 300 | | | |
| | | iii) தார் சாலையில் | 500 | | | |
| 7 | 187 | தெருக்களின் வீடு கட்டுவதற்குள்ள கல் மண் முதலியவைகளைச் சேமித்து வைக்க | 3000/– | ஒரு தடவைக்கு | - | - |
| 8 | 188, 233 | தெருவில் இடித்துக் கொட்டப்படும் கட்டிட இடிபாடுகள் அகற்ற | 3500/– | ஒரு லோடுக்கு | - | - |
| 9 | 192, 197 & 198 | ஒரு நிலத்தையோ அதன் பாகத்தையோ கட்டிடங்கள் கட்டுவதற்காக மனைப்பிரிவு ஆகப் பிரிக்க திட்ட மாற்றம் செய்ய | 15000/– | 1 ஹெக்டேர்க்கு அதன் பாகத்திற்கு | ஒரு தடவை மட்டும் | - |
| 10 | 197 (1) (a) 198 & 200 | அனுமதிக்கப்பட்ட எந்த மனைப்பிரிவும் சேர்க்கப்படாததும் ஒரு பொது அல்லது சொந்த தெருவை நோக்கி உள்ளதுமான இடத்தில் கட்டிடம் கட்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் மூலம் மனையை அங்கீகாரம் செய்ய பரிந்துரை செய்ய | 20/– | ஒரு ச.மீ / அதன் பாகத்திற்கு | மூன்று வருட காலத்திற்கு | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | 197 (1) (b) 201 & 215 | **கட்டிட உரிமக் கட்டணம்** | | | | |
| | | **கண்காணிப்புக் கட்டணம் (Scrutiny Fees)** | 500/– | | ஒரு தடவை மட்டும் | - |
| | | சுற்று,ச் சுவர் 8 அடி உயர்த்திற்குள் | 25/– | ஒரு மீட்டர் / அதன் பாகத்திற்கு | மூன்று வருட காலத்திற்கு | - |
| | | சுற்று,ச் சுவர் 8 அடி உயர்த்திற்க்கு மேல் | 50/– | ஒரு மீட்டர் / அதன் பாகத்திற்கு | மூன்று வருட காலத்திற்கு | - |
| | | 1. ஆர்.சி.சி. கான்கீரிட் கூரை கட்டிடம் கட்ட தரைதளம் மற்றும் தரை கீழ் தளத்திற்கு | 250/– | 10 சதுர மீட்டர் /அதன் பாகத்திற்கு | மூன்று வருட காலத்திற்கு | - |
| | | 2.முதல் தளம் | 300/– | 10 சதுர மீட்டர் /அதன் பாகத்திற்கு | மூன்று வருட காலத்திற்கு | - |
| | | 3.முதல் மாடிக்கு மேல் கூடுதல் மாடி கட்டப்படுவதற்கு | 350/– | 10 சதுர மீட்டர் /அதன் பாகத்திற்கு | மூன்று வருட காலத்திற்கு | - |
| | | **குடியிருப்பு அல்லாத அலுவலகங்கள் மருத்துவமனைகள் போன்ற உபயோகத்திற்கு** | | | | |
| | | 1. தரைதளம் | 425/– | 10 சதுர மீட்டர் /அதன் பாகத்திற்கு | மூன்று வருட காலத்திற்கு | - |
| | | 2. முதல் தளம் | 450/– | 10 சதுர மீட்டர் /அதன் பாகத்திற்கு | மூன்று வருட காலத்திற்கு | - |
| | | 3. முதல் மாடிக்கு மேல் கூடுதல் மாடி கட்டுவதற்கு | 500/– | 10 சதுர மீட்டர் /அதன் பாகத்திற்கு | மூன்று வருட காலத்திற்கு | - |
| | | ஏ.சி.சி. ஓட்டு கட்டிடம் | 225/– | 10 சதுர மீட்டர் /அதன் பாகத்திற்கு | மூன்று வருட காலத்திற்கு | - |
| | | மதம் அல்லது கல்வி சம்பந்தமான கட்டிடம் கட்டுவதற்கு | 400/– | 10 சதுர மீட்டர் /அதன் பாகத்திற்கு | மூன்று வருட காலத்திற்கு | - |
| | | கழிப்பிடம் செப்டிக் டேங்க் லீச் பிட் உடன் கூடியது | 250/– | ஒரு எண்ணிக்கைை | மூன்று வருட காலத்திற்கு | - |
| | | ஆய்வுக் கட்டணம் மற்றும் சேவைக் கட்டணம் | 7.50/– | ஒரு சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | மூன்று வருட காலத்திற்கு | - |
| | | புதியதாக சினிமா அல்லது டிராமா தியேட்டர் கட்ட | 75000/- | - | மூன்று வருட காலத்திற்கு | - |
| | | தற்காலிக சினிமாவுக்காக புது டெஸ்ட் அல்லது கீற்றுக் கொட்டகை கட்ட | 30000/- | - | மூன்று வருட காலத்திற்கு | - |
| | | தற்காலிக சர்க்கஸ்க்காக புதிய டெண்ட் அமைக்க | 2500/- | - | ஒரு மாதம் | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | | **அபிவிருத்திக் கட்டணம்** | | | மூன்று வருட காலத்திற்கு | - |
| | | 1. குடியிருப்பு மனைப்பிரிவிற்கு | 3/- | ஒரு சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | ஒரு முறை மட்டும் | - |
| | | 2. கட்டிட பரப்பிற்கு | 5/- | ஒரு சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | ஒரு முறை மட்டும் | - |
| | | 3. குடியிருப்பில்லாத கட்டிடங்களுக்கு (வணிகம் கல்லி தொழிற்சாலை மற்றும் மதம் போன்ற மனைபரப்பிற்கு | 5/- | ஒரு சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | ஒரு முறை மட்டும் | - |
| | | 4. கட்டிட பரப்பிற்கு | 10/- | ஒரு சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | ஒரு முறை மட்டும் | - |
| | | **காப்புத் தொகை** | | | | |
| | | 1.குடியிருப்பு உபயோகம் கட்டிட பரப்பளவில் | 40/- | ஒரு சதுர மீட்டருக்கு | ஒரு தடவை மட்டும் | - |
| | | 2. வணிக உபயோகம் | 80/- | ஒரு சதுர மீட்டருக்கு | ஒரு தடவை மட்டும் | - |
| | | **மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க காப்புத் தொகை** | | | | - |
| | | 1000 சதுரடி வரை | 2500/- | - | ஒரு தடவை மட்டும் | வைப்புத் தொகை |
| | | 1001 முதல் 4000 சதுரடி வரை | 4500/- | - | ஒரு தடவை மட்டும் | - |
| | | 4001 சதுரடிக்கு மேல் | 6500/- | - | ஒரு தடவை மட்டும் | - |
| 13 | 207, 223 | புதிய கிணறு / ஆழ் துளை கிணறு அமைக்க (போர்வெல்) ஆழப்படுத்த | 3500/- | ஒரு இனம் | ஒரு முறை மட்டும் | - |
| 14 | 208 & 210 | கூரை குடிசைகள் புதியதாக கட்டவோ கூடுதலாக கட்டவோ தற்காலிக கொட்டம் போடவோ | 75/- | 10 சதுர மீட்டர் /அதன் பாகத்திற்கு | மூன்று வருட காலத்திற்கு | மூன்று வருடத்திற்கு மேல் அனுமதி காலம் தேவைப்பட்டால் மீண்டும் தொகை செலுத்தி அனுமதி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். |
| 15 | 217 (2) | தற்காலிக கட்டிடங்கள் | 200/- | 10 சதுர மீட்டர் /அதன் பாகத்திற்கு | மூன்று வருட காலத்திற்கு | மூன்று வருடத்திற்கு மேல் அனுமதி காலம் தேவைப்பட்டால் மீண்டும் தொகை செலுத்தி அனுமதி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | திட்டமதிப்பு இல்லை என சான்றிதழ் வழங்க | 1500/- | ஒரு இனத்திற்கு | ஒரு முறை மட்டும் | - |
| | | அனுமதிக்கப்பட்ட வரைபடம் கூடதலாக வழங்க கட்டிட வரைபடம் 1 செட் | 250/- | ஒரு இனத்திற்கு | ஒரு முறை மட்டும் | - |
| | | கட்டிட உரிமையாணை நகல் ஒன்றுக்கு | 100/- | ஒரு இனத்திற்கு | ஒரு முறை மட்டும் | - |
| | | மனைப்பிரிவு நகல் ஒன்றுக்கு | 1500/- | ஒரு இனத்திற்கு | ஒரு முறை மட்டும் | - |
| | | நகரமைப்புத் திட்ட வரைபட நகல் | 1500/- | ஒரு இனத்திற்கு | ஒரு முறை மட்டும் | - |
| | | கட்டிட முடிவு குறித்த சான்றிதழ் | 1000/- | ஒரு இனத்திற்கு | ஒரு முறை மட்டும் | - |
| | | நகர வரைபடம் நகல் வழங்க | 1000/- | ஒரு இனத்திற்கு | ஒரு முறை மட்டும் | - |
| 16 | 250 | விவசாயிகளுக்காக மின்சார சக்தியினால் இயக்கப்படும் இயந்திரம் அல்லது உற்பத்தி சாதனம் நிறுவ மற்றும் மின்சார சக்தியில்லாத இதர சக்தியால் இயங்கும் இயந்திரங்கள் நிறுவன | இலவசம் | - | - | - |
| | | **இதர காரியங்களுக்கு** | | | | |
| | | ஒரு குதிரை வேகத்திற்கு மேற்படாதவை | 300/- | ஒரு இனம் | (மூன்று வருடத்திற்கு) | - |
| | | 1. குதிரை வேகத்திற்கு மேல் 5 குதிரை வேகத்திற்கு மேற்படாதவை | 1000/- | ஒரு இனம் | (மூன்று வருடத்திற்கு) | - |
| | | 5. குதிரை வேகத்திற்கு மேல் 20குதிரை வேகத்திற்கு மேற்படாதவை | 2000/- | ஒரு இனம் | (மூன்று வருடத்திற்கு) | - |
| | | 21. குதிரை வேகத்திற்கு மேல் 30குதிரை வேகத்திற்கு மேற்படாதவை | 3000/- | ஒரு இனம் | (மூன்று வருடத்திற்கு) | - |
| | | 31. குதிரை வேகத்திற்கு மேல் 40குதிரை வேகத்திற்கு மேற்படாதவை | 3000/- | ஒரு இனம் | (மூன்று வருடத்திற்கு) | - |
| | | 41. குதிரை வேகத்திற்கு மேல் 50குதிரை வேகத்திற்கு மேற்படாதவை | 3500/- | ஒரு இனம் | (மூன்று வருடத்திற்கு) | - |
| | | 51, குதிரை வேகத்திற்கு மேல் 100 குதிரை வேகத்திற்கு மேற்படாதவை | 4000/- | ஒரு இனம் | (மூன்று வருடத்திற்கு) | - |
| | | 101. குதிரை வேகத்திற்கு மேல் 200குதிரை வேகத்திற்கு மேற்படாதவை | 6000/- | ஒரு இனம் | (மூன்று வருடத்திற்கு) | - |
| | | 201. குதிரை வேகத்திற்கு மேல் 500குதிரை வேகத்திற்கு மேற்படாதவை | 15000/- | ஒரு இனம் | (மூன்று வருடத்திற்கு) | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 500. குதிரை வேகத்திற்கு மேற்படுபவைஅனைத்திற்கும் இவற்றுடன் சேர்ந்து நிறுவப்படும் இயந்திரம் ஒவ்வொன்றுக்கும் | 60000/- 1000/- | ஒரு இனம் | (மூன்று வருடத்திற்கு) | - |
| 17 | | படவரைவாளர் (Licensed Building Surveyor) | | | | - |
| | | (i) புதியதாக உரிமம் செய்வதற்கு | 3000/– | ஒரு முறை | - | - |
| | | (ii) உரிமம் புதுப்பிப்பதற்கு | 1500/– | ஒரு வருடத்திற்கு | - | - |
| | | (iii) புதியதாக உரிமம் பதிவு செய்வதற்கு வைப்புத் தொகை | 5000/– | ஒரு முறை | - | - |
| 18 | | ஆய்வுக் கட்டணம் | 8/– | ஒரு சதுரமீட்டர் | - | - |
| 19 | | மனை உட்பிரிவு, மனை ஒப்புதல் மனை ஒருங்கிணைப்பு கட்டணம் | 8/– | ஒரு சதுரமீட்டர் | - | - |

**அலுவலகக் குறிப்பு :–**

1. அனுமதிக்கலாம்
2. தற்போது உள்ள கட்டண விகிதங்களில் இருந்து இணைக்கப்பட்டுள்ள பட்டியலின்படி 01.04.2019 முதல் கட்டிட உரிமக் கட்டணம் மற்றும் இயந்திர நிறுவணக் கட்டணம் போன்றவைகளும் கட்டணத்தை திருத்தி அமைத்து நடைமுறைப்படுத்தவும், ,மாவட்ட அரசிதழ் மற்றும் நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் அதற்காகும் செலவு தொகையினை பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3216/2018/இ1)

**தீர்மான எண். 279**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

ஒட்டன்சத்திரம் நகராட்சிப் பகுதியில் பொது மற்றும் சமுதாய கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கு வடிவமைக்கப்பட்ட இயந்திரம் கொண்டு சென்னை Mobijet என்ற நிறுவனம் மூலம் இந்நகராட்சியிலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அலுவலகத்திலும் செயல் முறை விளக்கம் காண்பிக்கப்பட்டது. மேற்படி Mobijet இயந்திரம் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதியும் Manual Scavenging act – 2013 -ன்படியும் 2 இயந்திரங்கள் வாங்குவதற்கு செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி Mobijet இயந்திரம் வங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3699/2018/எச்1)

**தீர்மான எண். 280**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 3</u>**

இயக்குநர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம் கோயமுத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.848/2018/எ2 நாள்.18.12.2018–ல் 2018–2019 ஆம் ஆண்டிற்கான மேற்படி தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம் கோயமுத்தூருக்கு செலுத்த வேண்டிய ஆண்டு சந்தா தொகை ரூ.20000/– செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஆண்டு சந்தா ரூ.20000/– ஆயிரத்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 281**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 4</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஈப்பு வாகனம் TN 57 AW 2867 (ஆணையாளர் வாகனம்) பேட்டரி பழுதடைந்துள்ளதால், மேற்படி வாகனம் இயக்க முடியாத நிலையில் உள்ளதால், பழுதடைந்த பேட்டரியை மாற்றி புதிய பேட்டரி வாங்கி பொருத்திய வகையில் ரூ.6600/– மட்டும் JKR பேட்டரி ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம் பட்டியல் தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி புதிய பேட்டரி வாங்கி பொருத்திய வகையில் ரூ.6600/– ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 282**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 5</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் பொது சுகாதாரம் பேணும் பொருட்டு துப்புரவு தொடர்புடைய பணிக்கு தேவையான பணியாட்களை அரசாணை (நிலை) எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.04.1997–ன்படி பணியிடம் தோற்றுவித்ததன் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்கள் தவிர கூடுதலாக 5 சுய உதவிக்குழுக்கள் சேர்ந்து 74 பணியாட்கள் மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்கள் விலை விகிதப்படி (Unskilled Labours) தற்காலிகமாக அனுதித்து துப்புரவு தொடர்பான பணிகள் நடைபெற்று வந்த நிலையில் தற்போது இந்நகராட்சிக்கு உரக்கிடங்கு இல்லாததால், 100 சதவீதம் குப்பைகளை தரம் பிரித்து வாங்கவும், உரமாக மாற்றம் செய்யவும், மறு சுழற்சிக்கு உகந்த கழிவுகளை விற்பனை செய்து சம்மந்த பணியாளர்களுக்கே வழங்கவும், மறு சுழற்சி செய்ய இயலாத இதர கழிவுகளை சிமெண்ட் மற்றும் பவர் பிளாண்ட் அனுப்பி வைக்கவும், தேவையான பணியாட்களை அரசாணை (நிலை) எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.04.1997–ன்படி, பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட தேவையான பணியிடங்கள் Outsourcing முறையில் உரிய உத்தரவின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் K.Dis No.28369/J3/2018, நாள்.22.11.2018–ன்படி, ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் துப்புரவு பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட 47 நிரந்திர துப்புரவு பணியாளர்கள் போக கூடுதலாக தனியார் மையமாக்கல் மூலம் 140 பணியிடங்கள் தேர்வு செய்துகொள்ள உத்தரவு வரப்பெற்றது மன்றத்தின் அனுமதிக்கு.

அதற்கான உத்தேச செலவினம் மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.9693/2018/எப்5, நாள்.30.05.2018 வரிசை எண்.30–ல் தினக்கூலி பட்டியலின்படி தொகை ரூ.332/– ஐ நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு வழங்கவும், பணிபுரியும் பணியாளர்களுக்கு விதிப்படி முறையான EPF & ESI செலுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் மாவட்ட மற்றும் மாநில அளவில் நாளிதழில் அறிவிப்பு விளம்பரம் மற்றும் இதர செலவினம் செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.220.00 இலட்சம் தனி அலுவலரின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும்.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண்.865/2018/எச்1)

**தீர்மான எண். 283**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –6**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கடந்த இரண்டு ஆண்டு தமிழக அரசின் திட்டப்பணிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரையின் பேரில் கீழ்க்காணும் தினசரி நாளிதழ் தொழில் மலரில் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனங்கள் மூலம் வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தின பூமி (தொழில் மலர்) | 25,200/– |

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 284**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –7**

ஒட்டன்சத்திரம் குடிநீர் விநியோக பயன்பாட்டிற்காக நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள 6.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் அத்தொட்டியினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத் தீர்மான எண்.260 நாள்.16.11.2018–ல் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்காக 12.12.2018–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.அய்யாவு | 0.05 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஆர்.ரங்கசாமி | 3.00% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஆர்.அய்யாவு என்பவருக்கு 0.05% மதிப்பீட்டு விலையில் வரப்பெற்ற குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.அய்யாவு என்பவருக்கு ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 285**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –8**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 18–வது வார்டு குறிஞ்சி நகர் 'பி' பிளாக் மற்றும் 'சி' பிளாக் குடியிருப்பு பகுதியில் உள்ள தரைமட்ட தொட்டி மற்றும் மோட்டார் அறைகள் சிதலமடைந்துள்ளதால், பொதுமக்களின் நலன் கருதி மேற்படி தொட்டி மற்றும் மோட்டார் அறைகள் மராமத்து பணி மேற்கொள்ள ரூ.9.70 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தனிஅலுவலர் அவர்கள் நாள்.23.11.2018–ல் முன்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்காக 12.12.2018–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.அய்யாவு | 0.05 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஆர்.ரங்கசாமி | 3.00% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஆர்.அய்யாவு என்பவருக்கு 0.05% மதிப்பீட்டு விலையில் வரப்பெற்ற குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.அய்யாவு என்பவருக்கு ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 286**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –9**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு திடக்கழிவுகளை தனியாருக்கு சொந்தமான பட்டா இடங்களில் அவர்கள் அனுமதியோடு கழிவுகளை கெட்டி மண் தள்ளி மூடப்பட்டு வருவதற்கு வாரம் மூன்று நாற்களுக்கு JCB வாகனம் மணிக் கணக்கில் வாடகை முறையில் பயன்படுத்த வேண்டியுள்ளதால், 11/2018 முதல் 3/2019 வரை JCB வாகனம் வாடகைக்கு எடுத்து பயன்படுத்திக்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.7.60 இலட்சத்திற்கு தீர்மான எண்.237 நாள்.16.10.2018–ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 29.10.2018–ம் நாளில் கோரப்பட்ட விலைபுள்ளிப்புள்ளிகளின் பட்டியல் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | பொருள்கள் விபரம் | ஹச்.எம்.ஆர் கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ | அம்மன் எர்த் மூவர்ஸ், ஒட்டன்சத்திரம் ரூ | கே.ஆர் எர்த் மூவர்ஸ்,, ஒட்டன்சத்திரம் ரூ |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பகுதிகளில் குப்பைகளை அகற்ற JCB மூலம் அப்புறப்படுத்தும் ஒரு மணி நேரத்திற்கு | 925 | 950 | 1000 |
| 2 | நகராட்சி பகுதியில் தனியருக்கு சொந்தமான இடங்களில் குப்பை கொட்டுவதால் அவற்றை மூட டிப்பர் லாரி மூலம் மண் போட்டு மூட ஒரு நடைக்கு | 4000 | 4500 | 4300 |

மேற்காணும் வரப்பெற்ற நிறுவனங்களில் கலம் எண்.1–ல் உள்ள ஹச்.எம்.ஆர் கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனம் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ளதை தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன் அனுமதி பெற்று 01.11.2018 முதல் பணி மேற்கொள்ள, வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண். 287**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –10**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படி, வடகிழக்கு பருவமழை வெள்ள தடுப்பு நடவடிக்கைக்காக ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு 500 மணல் மூடைகள் தயார் செய்து வழங்கியமைக்காக ஹச்.எம்.ஆர் கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை ரூ.63,500/– மட்டும் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து, மேற்படி பட்டியல் தொகை வழங்க தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டதற்கான தொகையினை செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 288**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –11**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பூங்காக்களில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் முற்கம்பி பாதுகாப்பு வேலி அமைத்த இடங்களில் பசுமை உரக்குடில் (Garden Micro compost centre) அமைத்திட அறிவுரையின்படி, பூங்காக்களில் GMCC அமைத்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத் தீர்மான எண்.254 நாள்.16.11.2018–ல் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்காக 16.11.2018–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 0.15 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஆர்.அய்யாவு | 0.19% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஹச்.முகமது ரஸ்மி என்பவருக்கு 0.15% மதிப்பீட்டு விலையில் வரப்பெற்ற குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.15% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஹச்.முகமது ரஸ்மி என்பவருக்கு ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 289**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –12**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது சுகாதாரம் பழனி தைப்பூசம் திருவிழா 21.01.2019–ல் நடைபெறவுள்ள நிலையில் இந்நகராட்சி வழியாக இலட்சம் கணக்கில் பக்தர்கள் கடந்து செல்லும் நிலையில் 16.01.2019 முதல் நாள் ஒன்றுக்கு 4 MTS குப்பை உருவாகிறது. இவற்றை முறையாக அகற்றுவதற்கு உள்ளூரில் கூட்டுமார் பின்னும் நபர் வசம் தேவையான 20 கூட்டுமிளார் வாங்குவதற்கு செலவினம் ரூ.14,000/– வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்க தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, அதற்கான செலவின தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடவும், அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 290**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 13**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாரால் **2018—19** ஆண்டுக்கான **21.08.2018** முதல் **30.12.2018** முடிய பட்டுவாடா செய்யப்பட்ட செலவு சீட்டு எண் RF0278 முதல் RF0691 முடிய, WS0038 முதல் WS0086 முடிய மற்றும் TFV039 முதல் TFV070 முடிய தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், பதிவுக்கும்.

**தீர்மான எண். 291**

அனுமதிக்கப்பட்டது.

இடம். ஒட்டன்சத்திரம்.
நாள். 30.12.2018

தனிஅலுவலர்
மற்றும் ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி.